1979 மார்ச் 17]

Seminars for Headmasters of Higher Secondary Schools.

* Q. No. 444 Thiru C. MANICKAM :—Will the Hon. the Minister for Education be pleased to state.

(a) whether seminars for the benefit of Headmasters and Head mistresses of the Higher Secondary Schools in this State by the Chief Educational Officers were conducted in May-June 1978: and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) ஆம்.

மேல்நிலைப் பள்ளிகளை நிறுவும்போதும் நடத்தும்போதும் ஏற்படும் பல்வேறு சிக்கல்கள் பிரச்சினைகள் முதலியவற்றை ஆராய்ந்து தீர்வு காணும் பொருட்டு, மே திங்கள் 19, 20, 21 நாட்களில் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்ட மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்/ஆசிரியைகளுக்கும், கல்வித்துறை ஆய்வு அலுவலர்களுக்கும் மூன்று நாட்கள் மேல்நிலைப் பள்ளிக் கல்விப் பண்ணை (Workshop) நடத்தப்பட்டது.

மற்ற மாவட்டத்தைச் சேர்ந்த தலைமை ஆசிரியர்/ஆசிரியைகளுக்கு நடத்தப்பட்ட கருத்தரங்கு விவரம் பின்வருமாறு :—

மாவட்டம். (1)	கருத்தரங்கு நடைபெற்ற இடம். (2)	கருத்தரங்கு நடைபெற்ற நாள். (3)
சென்னை ..	சிமாட்டி வெலிங்டன் பயிற்சிக் கல்லூரி.	3—6—1978
செங்கல்பட்டு, தென்னாற்காடு.	விழுப்புரம்	15—6—1978
வடாற்காடு, தர்மபுரி சேலம்.	சேலம்	20—6—1978
தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை.	திருச்சி	21—6—1978
மதுரை, இராமநாதபுரம்.	மதுரை	22—6—1978
திருநெல்வேலி, கன்னியாகுமரி	திருநெல்வேலி ..	23—6—1978

[முற்பகல் 9·50)

திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்தரங்கு எதைப் பற்றியது, அந்தக் கருத்தரங்கு மாணவர்களுக்கு எந்த வகையில் பயன் அளிக்கக்கூடியது. அந்தக் கருத்தரங்கு நடத்தியதால் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கருத்தரங்கு மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியைகள் ஆகியோர்க்கு நடத்தப்பட்டதாகும், புதிதாக துவக்கப்பட்டப் பள்ளிகளில் இருக்கக்கூடிய அல்லது எதிர் பார்க்கும் பிரச்னைகள், சிரமங்கள் இவைகளையெல்லாம் ஆராய்ந்து, முன்கூட்டியே அவைகளைக் குறித்து விளக்க அந்தக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறோம். கோவையில் நடைபெற்ற கருத்தரங்கை அவர்கள் அதை ஒரு பணிப்பண்ணையாக நடத்தி, அதிலே பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து, பரிந்துரை செய்து, அதைப் புத்தகமாக வெளியிட்டு எல்லாத் தலைமை ஆசிரியர் களுக்கும் அனுப்பப்பட்டது. அந்த அடிப்படையில் தான் இன்று பல்வேறு நடவடிக்கைகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதனால் மாணவர்களுக்கு நேரடியாக பயன் இல்லை என்றாலும், பள்ளி நல்லமுறையில் நடத்தப்படுவதால் மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

திரு. அ. செல்லப்பா : தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளிகளில் வரலாற்றிற்கு ஒதுக்கப் பட்ட இடங்கள் எத்தனை? அதிலே எம்.ஏ.பி.டி. படித்த தாழ்த் தப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஆண்டு தோறும் இது போன்ற கருத்தரங்குகள் நடத்தி புதிய சிந்தனை களை அவர்களுக்கு ஏற்படுத்துவதற்கு அரசு வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, இந்தக் கருத்தரங்குகள் எந்த விதத்தில் அவர்கள் பள்ளியை நிர்வகிப்பது என்பதை பற்றிய ஒரு கருத்தரங்கு. அது எல்லா மாவட்டங்களிலும் நடத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவைகள் அந்த வகையில் செயல்பட்டு வருகின்றன. இது போன்ற கருத்தரங்குகளும், பயிற்சிகளும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது அரசின் எண்ணம்.